# கலாபூஷணம் அபூநானா கே.ஏ. ஜவஹர்

## ஆழத்து முத்துக்கள் 123

- தெளிவத்தை ஜோசப் -

வடகொழும்பின் நாடக உலகில் ஒரு நவ ரச நாயகனாய் கொடி கட்டிப் பறந்த நடிகர் கே.ஏ.ஜவஹர் அவர்கள்.

1956க்குப் பிந்திய காலங்களில் இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுத் தலைவராகப் பேராசிரியர் வித்தியானந்தன் இருந்தபோது அந்தக் குழுழவின் செயலாளராகவிருந்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் இந்த வட கொழும்பு நாடகக்காரர்கள் பற்றிக்குறிப்பிடுகையில் ‘கொழும்பு வடக்கின் தொழிலாளர் மட்ட வாழ்க்கை அடித்தளத்தில் ஒரு பலமான பண்பாட்டு வேர் அதிகம் பாதிக்கப்படாமல் இருப்பதைக் காணமுடிந்தது. கூத்து மீட்பை ஒரு முக்கிய தொழிற்பாடாகக் கொண்டிருந்த எங்கள் நாடகக் கலைக்குழு இயங்கிக் கொண்டிருக்கும் நாடக மன்றங்களுக்கு ஊக்கம் அளிப்பதையும் இன்னொரு முக்கிய செயற்பாடாகக் கொண்டிருந்தது.

அதன் காரணமாக கொழும்பு வடக்கில் மேடை நாடக ஈடுபாடு கொண்டிருந்த பல மன்றங்களின் நண்பர்களுடன் பழக வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. இவர்களோடு தொடர்பு கொண்டபோதுதான் நாடக ஆற்றுகை எத்தகைய ஒரு வலுவான சமூக வெளிக் கொணர்கையாக தொழிற்பட்டதென்பது தெரியவந்தது.

சமூக ஒடுக்குமுறைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும் இந்தக் கலை உதவிற்று. அப்பகுதியில் வாழும் தமிழ் - தமிழ் பேசும் இளைஞர்களுக்கு நாடகம் ஒரு முக்கிய கலை வடிவமாயிற்று. தங்களின் திறமைகளை தங்களுக்குத் தாமேயும் தங்கள் நண்பர்களுக்கும் நிரூபிப்பதற்கான ஒரு கலைவடிவமாக நாடகம் அமைந்தது.

தமிழ் கூத்து மரபின் ஆழ அகலங்களை இது பயன்படுத்தவில்லை. வடக்கு கிழக்கின் பிரச்சினைகளோடும், ஆற்றுகை வெளிப்பாடுகளுடனும் இணையவில்லை. சிங்கள நாடக உலகோடு கணிசமான ஊடாட்டம் கொண்டுள்ள இத்துறை ஈழத்து நாடக வளர்ச்சியில் ஒரு தனித்த நீரோட்டமாகவே இருந்து வந்துள்ளது. அழகியல் உணர்வு, ஆளுமை விருத்திக்கு உதவி செய்வதற்கான அற்புதமான உதாரணங்களாக இவர்கள் விளங்கினர். இந்தக் கலைப் பெருங்கடலுக்குள் இருந்து கிடைத்த முத்துக்கள் பல’ என்று குறிக்கின்றார் பேராசிரியர்.

அந்த முத்துக்களில் ஒரு சிலர் தாய் வீட்டின் ஆழத்து முத்துக்களில் ஏலவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். ஜே.பி.ரொபட், மாத்தளை கார்த்திகேசு, அந்தனி ஜீவா, கே.கோவிந்தராஜ், கே.செல்வராஜ், எஸ்.கந்தையா, கே.பாலச்சந்திரன், மானா மக்கீன், செல்வசேகரன் போன்றோர் ஒரு சில முத்துக்கள்.

அறுபதுகளில் தொடங்கி தொண்ணூறுகள் வரையிலான ஒரு மூன்று தசாப்த காலங்கள் தனது நவரச நடிப்பால், கணீர் என்ற குரல் வளத்தால் கொழும்பின் நாடக உலகை கட்டிப் போட்டுக் கொண்டும் கட்டிப் பிடித்துக் கொண்டும் இருந்த கலைஞர் கே.ஏ.ஜவஹர். இந்தக்கலைப் பெருங்கடலின் இன்னொரு முத்து.

வட கொழும்பின் கிராண்ட்பாஸ் லெயார்ட்ஸ் புரோட்வேயில் 1945ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி பிறந்தவர் ஜவஹர். வாப்பா கே.அப்பாஸ் உம்மா சுல்தான் பீபீ. கொஞ்சமாகவே என்றாலும் கல்வி கொடுத்தது கொழும்பு ஹமீத் அல் ஹூசைனி மகாவித்தியாலயம்.

20 வயதில் அரங்கியல் துறைக்குள் காலடி வைத்த ஜவஹர் வானொலி, தொலைக்காட்சி, மேடை சினிமா என்று தன்னை நிரூபித்தவர் நிலைநாட்டிக் கொண்டவர். கட்டுபெத்தை வளாகம் கலைவிழாக்கள், ஆண்டு விழாக்களுக்காகஎழுபதுகளில் அடிக்கடி நாடகங்களை மேடையேற்றி வந்தது. க.பாலேந்திரா, சுஹேர் ஹமீட், கௌரி சங்கர், மாவை நித்தியானந்தன் கு.புனிதவேல் என்று கட்டுபெத்தை வளாகத்தின் அரங்கியல் செயற்பாடுகள் கலகலத்துக் கிடந்த காலம் எழுபதுகள்.

1974ல் பௌசுல் அமீரின் உருவாக்கத்தில் சுஹேர் ஹமீடின் நெறியாள்கையில் சாதிகள் இல்லையடி பாப்பா கட்டுப்பெத்தை வளாகத்தில் மேடையேறியது. ஏ.ராஜபாண்டியன், கே.ஏ.ஜவஹர் ஆகிய இருபெரும் நடிகர்கள் பார்வையாளர்களை கட்டிப் போட்டு வைத்திருந்தனர்.

கே.ஏ.ஜவஹரைப் போலவே ஏ.ராஜபாண்டியனும் உணர்வுகள் கொப்பளிக்கும், குணச்சித்திர பாத்திரங்களை ஒரு தைர்யத்துடன் ஏற்று நடிப்பவர். இவர்கள் இருவரும் அநேகமாகச் சேர்ந்து நடிப்பதில்லை. சேர்ந்து நடிக்கும் ஒரு சில நாடகங்கள் அரங்கியல் ரசிகர்களுக்கு பெரு விருந்தாய் அமைந்துவிடும். நீயா நானா என்பது போல் இருவருமே சில தனித்தனி முத்திரைகளை வீசி இறைத்து ரசிகர்களின் கரகோஷம் பெறுவதுண்டு.

தனித்தனிக் குழுக்கள் அவருக்கும் இவருக்குமென கைதட்டி ஆரவாரம் செய்யும்.

அந்த இரு பெரும் கலைஞர்களும் இப்போது நம்மிடையே இல்லை.

‘பிள்ளை பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார்’
‘சாதிகள் இல்லையடி பாப்பா’
‘சக்காரம் பைண்டர்’ போன்ற நாடகங்கள் மூலம் உணர்ச்சிப் பிழம்பாக மாறி மாறி ரசிகர்களை அழவைப்பவர் ஜவஹர். சிரிக்கவும் வைப்பவர் உணர்ச்சி வசப்படவும் வைப்பவர்.

நவரசங்களையும் உடனுக்குடன் மாற்றி மாற்றி முகத்தில் காட்டக்கூடிய வல்லமை கொண்ட கலைஞர் ஜவஹர்.

அறுபது எழுபது எண்பது வரையிலும்கூட ஒரு குணச்சித்திர நடிகராகத் திகழ்ந்த ஜவஹர் 90களின் ரசிகர்களுக்கு அபூநானாவாகிப் போனார்.

குணச்சித்திர நடிகர் கே.ஏ.ஜவஹர் என்றால் யார் என்று திகைக்கும் பிந்தைய கால ரசிகர்கள் ‘அபூநானா’ என்றதும் ஓ அவரா.... என்று துள்ளிக் குதிப்பார்கள்.

ரூபவாஹினிக்குப்பிறகு இன்னொரு தொலைக்காட்சியாகத் தோன்றிய ஐ.டி.என் தொலைக்காட்சி ஒவ்வொரு ஞாயிறும் ஒளிபரப்பிய நகைச்சுவை அரட்டை நாடகம் அபூநானா (90 களில்) கேலியும் கிண்டலும் கலந்த அபூநானா பாத்திரத்தில் சக்கைபோடு போட்டவர் ஜவஹர். அவருடைய உடலும் குரலும் நன்றாகவே அவருடன் ஒத்துழைத்த தொடர் நாடகம் அபூநானா.

கே.ஏ.ஜவஹரின் வானொலி மேடை நாடகங்களை கணக்கிட்டுப் பேசுவது கடினம். நாடக மேடையேற்றங்கள் மூலம் 500 தடவைகள் போல் மேடையிலும் 2000 தடவைகள் போல் வானொலி நாடகங்களிலும் நடித்து சாதனை படைத்தவர் இவர்.

தினகரன் நாடக விழாவில் சிறந்த துணை நடிகர் (1969) இலங்கை கலாசாரப் பேரவை நாடக விழாவில் தொடர்ந்து இரண்டு வருடம் (1974-1975) சிறந்த குணச்சித்திர நடிகர் போன்ற நிறைய விருதுகளைப் பெற்றுள்ளவர் கே.ஏ.ஜவஹர்.

இந்து சயம, கலாசார அலுவல்கள் திணைக்களம் 1997ல் நடத்திய தமிழ் நாடக விழாவில் கே.கோவிந்தராஜ் அவர்கள் எழுதிய ‘கவ்வாத்துக்கத்தி’ ஆர் ராஜசேகரன் ஹெலன்குமாரி தம்பதிகளின் வெள்ளி நிலா கலாலயத்தினரால் மேடையேற்றப்பட்டது. இந்த மலையக நாடகத்தின் பிரதான பாத்திரம் கே.ஏ.ஜவஹர். ஹெலன் குமாரி, ராஜசேகரன், எஸ்.கந்தையா செல்வம் பெர்னாண்டோ, சிதம்பரம் என்று நிறையவே பெரிய நடிகர்கள் பங்கேற்றிருந்த இந்த நாடகம் சிறந்த நாடகத்துக்கான முதற் பரிசைப் பெற்றுக்கொண்டது.

கிண்டல் கேலியுடனான கொச்சைத் தமிழையும் (அபூநானா) இலக்கண சுத்தமான செந்தமிழையும் (சரித்திர நாடகங்கள்) தன்னால் சுவை குன்றாமல் பேசி நடிக்க முடியும் என்பதை நிலைநாட்டியவர் அமரர் கலைஞர் கே.ஏ.ஜவஹர்.

இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் வரலாறு இலங்கைத் தமிழர்களின் வரலாற்றைப் போலவே சோகமானது. 1962ல் ‘சமுதாயம்’ என்னும் படத்துடன் ஆரம்பமான இந்த வரலாறு 1993ல் கிட்டத்திட்ட 28 படங்களுடன் (ஷர்மிளாவின் இதய ராகம்) முடிவடைந்தது.

முடிவடைந்தா போய்விட்டது என்று யாராவது கச்சை கட்டிக் கொண்டு கிளம்பி விடாதீர்கள். ஏறத்தாழ முடிந்துவிட்ட மாதிரிதான்.

இந்த 28 படங்களிலும் பத்துப் படங்களில் நடித்துள்ள பெருமைக்குரியவர் நமது ஜவஹர்

- புதியகாற்று – 1975
- கோமாளிகள் - 1976
- நான் உங்கள் தோழன் - 1978
- வாடைக்காற்று – 1978
- தென்றலும் புயலும் - 1978
- தெய்வம் தந்த வீடு – 1978
- ஏமாளிகள் - 1978
- எங்களில் ஒருவன் - 1979
- நெஞ்சுக்கு நீதி – 1980
- ஷர்மிளாவின் இதயராகம் 1993

ஆகியவை இவர் நடித்த இலங்கைத் திரைப்படங்கள்.



தென்றலும் புயலும் படத்தில் கே.ஏ.ஜவஹருடன் அமரசிங்கம்

ஈழத்தைப் பொறுத்தவரை இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்றவர்கள் தத்தமது ஜீவியத்துக்காக ஒரு உத்தியோகம் பார்ப்பவர்களே. மிகச்சிலரே முழுநேர எழுத்தாளராகக், கலைஞராக வாழ்பவர்கள் - வாழ்ந்தவர்கள்.

முழுநேரக் கலைஞராகவே வாழ்ந்த அந்த மிக மிகச் சிலருள் கலாபூஷணம் கே.ஏ. ஜவஹர் மிக மிக முக்கியமானவர்.

ஈழத்து நாடக உலகின் ஒரு இன்றியமையாத மறந்துவிட முடியாத, நாடகக் கலைஞராகத் திகழ்ந்தவர் கலாபூஷணம் கே.ஏ. ஜவஹர் அவர்கள்.



theliwathai.joseph@thaiveedu.com